**மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01 - 2021**

---

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 01 இன் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2015 செப்தெம்பர் 17 ஆம் திகதிய 3267–(எஸ்ஆர்ஜ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.06 (அ) உறுப்புரை மற்றும் 3268–எஸ்ஆர்ஜ(எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.03 (அ) உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

நிழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்டிக்கைகளின் பிரகாரம், நீர்ப்பாசன அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்டப் பகுதியில் விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 28,713 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 190 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 22,668 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 150 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 6,045 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2015 யூன் 24 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எனினும் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 யூன் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

---

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

2. பௌதீக செயலாற்றல்

2.1 நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 03 பிரதான கூறுகளின் கீழ் அமுல்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் வேலைகளின் பௌதீக செயன்முன்னேற்றம் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

| | கூறுகள் | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | தாமதங்களிற்கான காரணங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடையப்பட்ட செயலாற்றல் சதவீதம் | | | |
| (அ) | மேல் எலஹெர கால்வாய் நிர்மாணம் | 22 | 19 | ஒப்பந்தகாரரால் தற்காலிகமாக வேலை நிறுத்தப்பட்டமையின் காரணமாக எதிர்பார்த்த பௌதீக செயல் முன்னேற்றத்தை அடைய முடியாதிருந்தது. | செயற்திட்ட நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட தாமதம். அதற்கு மேலதிக நிதி தேவையாக உள்ளமை. மேலும், அது விவசாய ரீதியான நடவடிக்கைகளுக்காகவும் தாக்கம் அளிக்கக் கூடியதாக இருந்தது. | ஒப்பந்தத்தின் கீழ் காணப்படுகின்ற செயற்பாடுகளின் தாமதத்துடன் ஆரம்பிக்கப்பட்டமை மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக காசு மூலங்கள் மற்றும் ஊழியர் பற்றாக்குறை ஏற்பட்டமை. |
| (ஆ) | வடமேல் மாகாண கால்வாய் நிர்மாணம் | 46 | 30 | ஒப்பந்தமொன்றை வழங்குவதிலுள்ள தாமதங்கள் மற்றும் 2016 மற்றும் 2018 இன் போது வழங்கப்பட்ட 02 ஒப்பந்தங்களின் வேலைகளின் மெதுவான முன்னேற்றம் | தொடர்புடைய தரப்பினர்களுக்கு எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கபெறாமை. | வேலை திட்டமிடலில் குறைபாடுகள் மற்றும் காணி சுவீகரிப்பு தொடர்பான சிக்கல்களினால் |
| (இ) | மினிப்பே இடது கரை புனரமைப்பு | 100 | 87 | 2018 இன் போது கையளிக்கப்பட்ட ஒப்பந்த தாரரர்களின் மெதுவான முன்னேற்றம் | தொடர்புடைய தரப்பினர்களுக்கு எதிர்பார்த்த நலன்கள் கிடைக்கபெறாமை. | சிவில் நிர்மாண வேலை திட்டமிடலில் காணப்பட்ட குறைபாடுகளினால் |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் கருத்துரை** | முரண்பாடுகளுக்கு பிரதான காரணமாக பல்வேறு வகை கொவிட் 19 பரவல் அநேகமாக இருந்ததுடன் பொறியியலாளர்களுக்கும் தொழில் தருனர்களுக்கும் அவர்களின் நடமாடும் வரையறை விதிக்கப்பட்டிருந்ததுடன் வேலை வரையறுக்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக நிர்மாண வேலைகளின் செயற்திறன் அதிகமாக வீழ்ச்சியடைந்திருந்தது. இலங்கை மற்றும் உலக சந்தை இரண்டிலும் உலோகங்கள், சீமெந்து போன்ற மூலப்பொருட்களுக்கு கணிசமான பற்றாக்குறை காணப்பட்டது. மேலும் திட்டமிடப்பட்ட பிரகாரம் வேலைகளை நிறைவேற்றுவதற்கு அவர்களுக்கு முடியாமையின் காரணமாக அநேகமான ஒப்பந்தகாரர்கள் அதிக நிதிப் பற்றாக்குறைக்கு முகங்கொடுத்திருந்தமை இனங்காணப்பட்டிருந்தது. அதனால் நிதி மூலங்களின் பற்றாக்குறை மற்றும் ஊழியர்களின் பற்றாக்குறை என்பவற்றால் வேலைகளின் செயல்முன்னேற்றத்திற்கு தாக்கமளித்திருந்தது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** | செயற்திட்டத்தினால் தீர்மானிக்கப்பட்ட கால எல்லையில் கிரய நலனாக பணிகளை நிறைவேற்றக்கூடிய வகையில் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்த பொதியின் கீழ் உள்ள சிவில் நிர்மாண வேலைகளை சரியாக ஒழுங்குபடுத்துதல் அவசியமாகும். |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வடமேல் மாகாண கால்வாய் நிர்மாணத்தின் கீழ் நாபதகஹவத்த இலிருந்து மஹகிதுல நீர்த் தேக்கத்தை உள்ளடக்கிய சுரங்கம் வரையான பிரதான கால்வாய் 2021 மே 06 ஆம் திகதியளவில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 62 சதவீத பௌதீக செயல்முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. 2022 செப்தெம்பர் 24 வரை காலநீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. | காணி கைப்பற்றுவதில் தாமதம் மற்றும் விசேடமாக 2018 ஆம் ஆண்டு முதல் மேன்முறையீட்டு சபைகளில் 10 வழக்குகள் காணப்பட்டதன் காரணமாக நிர்மாண வேலைகளை தொடர்ச்சியாக கொண்டு செல்வதற்கு ஒப்பந்தக் காரர்களுக்கு முடியாதிருந்தது. | ஒப்பந்த முரண்களை இழிவுபடுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கிலோமீட்டர் 0,100 முதல் 3,860 வரை உயர் எலஹெர கால்வாய் நிர்மாணம் 2020 சனவரி 08 ஆம் திகதி பூர்த்தி செய்ய வேண்டி இருந்தது. எதிர்பார்த்த பௌதிக செயல் முன்னேற்றம் 100 சதவீதம் ஆகும். எனினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான முன்னேற்றம் 64 சதவீதம் மாத்திரமாக இருந்தது. நலிவான செயல் முன்னேற்றத்தின் காரணமாக ஒப்பந்தம் 2021 யூன் 07 ஆந் திகதி நிறுத்தப்பட்டிருந்தது. ரூபா 608 மில்லியன் பெறுமதியான செயலாற்றல் மற்றும் நடைமுறைகளுக்கான முற்பணத்திற்கு பதிலாக வங்கிப் பிணை முறியை முடிவுறுத்துவதை தடுப்பதற்காக ஒப்பந்த காரரால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் தடையுத்தரவு கோவையிடப்பட்டிருந்தது. | இந்த பிரச்சினைகள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் வணிக நீதிமன்றத்தில் தீர்ப்பிற்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் உயர்நீதிமன்றத்தில் முறையீடொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேல்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுகின்றது. | ஒப்பந்த முரண்களை இழிவுபடுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மினிப்பே இடதுகரை வாய்க்கால் மறுசீரமைப்பு நிர்மாணத்தின் கீழ் நீரை கட்டுப்படுத்துதல் மற்றும் அளவிடல் வசதிகளை உள்ளடக்கிய மினிப்பே அணைக்கட்டை உயர்த்தும் ஒப்பந்த காலஎல்லை 2020 நவம்பர் 12 ஆந் திகதியில் முடிவடைய வேண்டும். ஒப்பந்தகால எல்லையில் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரர் தவறியமையின் காரணமாக ஒப்பந்தக்கால எல்லை 2021 மே 21 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் நிர்மாண வேலைகள் நீடிக்கப்பட்ட கால எல்லையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான செயல் முன்னேற்றம் 73 சதவீதம் மாத்திரம் ஆகும். | சில வேலைத் தளங்களில் பதவியணியினர் மற்றும் ஊழியர்கள் கொவிட் 19 பரிசோதனைக்கு உட்பட்டமை மற்றும் உச்ச அளவில் விதிக்கப்பட்ட வரையறைகள், வேலைத் தளங்களுக்கு மூலப்பொருட்களை வழங்குவதிலுள்ள கஷ்டமான நிலைமையும் காரணமாக இருந்தது. | நிர்மாண வேலைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | முறைமைகளை செயற்திறனாகவும் நீரை ஆக்கபூர்வமானதாகவும் அபிவிருத்தி செய்யும் ஆலோசனைச் சேவை (ஐளுநுறீ) 2015-2017 வரை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் அது 2021 திசெம்பர் 18 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 மே வரையிலும் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | தற்போது மீளாய்வுகள் செய்யப்பட்டு இறுதி அறிக்கை 2022 மே 24 ஆந் திகதி செயற்திட்ட முகாமைத்துவத்தின் இணக்கப்பாட்டிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி உரிய கால எல்லையின் பிரகாரம் ஆலோசனைச் சேவைகளை அமுல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மேல் எலஹெர கால்வாய் செயற்திட்டத்திற்குரிய 741 காணிக் கூறுகளை கைப்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் எந்தவொரு காணிக்கூறும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கைப்பற்றப்பட்டிருக்க வில்லை. மேலும் வயம்ப வாய்க்கால் செயற்திட்டத்திற்குரிய 961 காணிக் கூறுகளை கைப்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த துடன் 947 காணிக் கூறுகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கைப்பற்றப்பட்டிருக்க வில்லை. எனினும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எந்தவொரு காணிக் கூறும் காணி கைப்பற்றல் சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ஏற்பட்ட கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினால் சுகாதார அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட சுகாதார ஆலோசனைகளுக்கிணங்க நடமாடும் வரையறை மற்றும் வரையறுத்த பிரதேசங்களில் வேலை வரையறுத்தமையின் காரணமாக காணிகளை கைப்பற்றும் செயற்பாடுகள் தாமதமடைந்தமையால் பல்வேறு இடையூறுகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்டிருந்தது. | காணிகளை கையேற்கும் செயற்பாடுகளை விரைவு படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2021 பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் புதிதாக 60 வானொலி அலைகளை கொள்வனவு செய்வதற்காக 2021 யூலை 20 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு திட்டமிடப்பட்டு ரூபா 64.8 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மே மாதம் அளவில் தொழில்நுட்பக் குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | வனசீவராசிகள் திணைக்களத்தின் நிபுணர்களிடமிருந்து கேள்வி ஆவணங்களை பூர்த்தி செய்வதன் தாமதத்தின் காரணமாக வெளிவாரி சேவையை பெறவேண்டி ஏற்பட்டிருந்தது. ஆவணங்கள் பூர்த்தி செய்யப்பட்டமையால் 2022 மே மாதம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |